264

264

கமல வாசகம்

இரண்டாம் வகுப்பு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 ... 1959

TB
031 (20
N58
136338.

...ந்தா பதிப்பகம்,
.... திருவாரூர்., ஜங்.

264
1-59

கமல வாசகம்

மலேயா பதிப்பு

இரண்டாம் புத்தகம்

ஆசிரியர்கள் :

வித்துவான் ரா. விசுவநாதன் எம்.ஏ., பி.ஓ.எல்.,
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்,
மாகாண அரசினர் கல்லூரி, சென்னை.

&

பண்டிதர் செ. முத்துரத்ன முதலியார்,
முன்னாள் தலைமைத் தமிழ்ப் பண்டிதர்,
அரசினர் உயர்தரக் கலாசாலை, திருவாரூர்.

பதிப்பாசிரியர்

புலவர் பு. செல்வராசனார்
தலைமைத் தமிழாசிரியர்,
C. A. H. இந்து முஸ்லீம் உயர்நிலைப்பள்ளி, சென்னை-1.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1959
MADRAS

V. P. H.
R. T. N.
VIJAYAPURAM ★ TIRUVARUR

விவேகானந்தா பதிப்பகம்

விஜயபுரம் :: திருவாரூர் ஜங்ஷன்.

பதிப்புரிமை] 1958 [விலை 7 அணா

முதற் பதிப்பு	1951.
இரண்டாம் பதிப்பு	1952.
மூன்றும் பதிப்பு	1955.
திருத்திய நான்காம் பதிப்பு	1956.
ஐந்தாம் பதிப்பு	1958.

தமிழ்நாடு ... கன்னிமாரா பொது நூலகம்
சென்னை-600 008
136338
TB
31(2)
N58

Approved by the Director of Education
Fedaration of Malaya.

Printed in Double Crown 24 lbs white
printing glaze paper.

Approved by the Text Book Committee, Madras.
Vide Fort St. George Gazette Part I-B Page 3
Dated 10th April 1957.

Printed at Rajan Electric Press, Madras-1.

முகவுரை

இன்றைய மாணவர் நாளைய நாட்டு மக்கள். நம் நாடு சுய உரிமை பெற்ற நாடு. நம் மக்களின் அறிவு வளத்திலும் ஆற்றல் வலிமையிலும் ஒழுக்கப் பெருமையிலுமே நம் நாட்டின் வருங்காலச் சிறப்பு அமையக் கிடக்கின்றது. மொழி ஒரு சமூகக் கருவி. அதன் வழியாகவே சமூக வளர்ச்சியும் ஆக வேண்டும். ஆகவே இன்றைய சூழ்நிலையில் மொழிப் பயிற்சி ஒரு தனி இடம் பெற்று விளங்கு கிறது.

அரசியலார் வகுத்துள்ள பாடத் திட்டமும், ஆன்றோர்களின் அனுபவ முறைகளும் மொழிப் பயிற்சியின் வழியாகக் கல்வியின் குறிக்கோள்களை எவ்வாறு பெறலாம் என்று காட்டுகின்றன. அடிப் படைக் கல்வித் திட்டமும் இக் குறிக்கோள்களையே வற்புறுத்துகின்றது. மொழியை மொழியறிவுக்காகப் படிப்பதோடு அதனை வாழ்க்கையோடும் ஒட்டிப் பயிற்றுவிக்க வேண்டுமென்பது மேலே சுட்டிய எல்லாத் திட்டங்களின் கொள்கையாகும்.

இக்கருத்துக்களை உட்கொண்டு சுருங்கிய முறையில் நிரம்பிய பயனைப் பெற உதவ வேண்டு மென்று இப்புத்தகம் எழுதப் பெற்றுள்ளது. பிள்ளைகளுடைய அறிவுக்கொத்த பாடங்களே இங் குத் தரப்பெற்றுள்ளன. கண்டன கொண்டு காணாத வற்றை ஊகிக்க வழிகள் கையாளப் பட்டுள்ளன. பாடங்கள் பெரும்பாலும் வாய்ப் பாடங்களாகவும், மௌன பாடங்களாகவும், பிள்ளைகள் இன்பத்

துடன் தாமே படித்தறியத் தக்கவைகளாகவும் பொறுக்கிச் சேர்க்கப் பெற்றுள்ளன. பேச்சுப் பழக்கமும், உய்த்தறியும் திறனும், குறித்துச் சொல்லும் ஆற்றலும் தம்மைச் சூழ்ந்துள்ளவற்றை உற்று நோக்கும் பழக்கமும், வளர உதவும் வண்ணம் பாடங்களும் பயிற்சிகளும் அமைக்கப் பெற்றுள்ளன. நாட்டுப்புறத்தின் இன்றியமையாமையும் சிறப்பும் மாணவர்களின் கருத்தில் ஊன்ற முறைகள் கையாளப் பெற்றுள்ளன.

இவ்வகுப்பில் வாய்ப் பேச்சின் தெளிவும் நேர்மையுமே அதிகமாகக் கவனிக்கப் பெற வேண்டியவை. கையெழுத்தின் அழகைக் காட்டிலும் தெளிவே வற்புறுத்தத் தக்கது. கட்டுரையாக்கம் குறித்த பொருளைக் குறித்த முறையில் வைத்துப் பேசச் செய்தல் போதுமானது. இலக்கணம் என்பது அநுபவத்தில் வேண்டியதேயன்றி இலக்கணப் பாடமாக அமைத்தல் ஆகாது. உச்சரிப்பு தெளிவாய் அமையவேண்டும். இக் குறிக்கோள்களைக் கொண்டு பயிற்சிகள் கையாளப்பட வேண்டுமேயன்றிப் பிள்ளைகள் வினக்களுக்கெல்லாம் விடை எழுதப் பழகவேண்டு மென்பது இவ்வகுப்பிற் கூடாது. ஆகவே பாடங்களும் பயிற்சிகளும் மாணவர்களின் பேச்சு வன்மையைத் தூண்டவே அமைக்கப் பெற்றுள்ளன.

இறைவன் அருளால் இக்குறிக்கோள்கள் நிறைவேற இப்புத்தகம் சிறந்த கருவியாகப் பயன்பட வேண்டுமென்று அவன் திருவருளை வணங்குகின்ருேம்.

பதிப்பகத்தார்.

பொருளடக்கம்

எண்	பாடம்		பக்கம்
1.	படப் பயிற்சி	...	1
2.	படப் பயிற்சி	...	2
3.	எது சரி?	...	3
4.	என்ன ?	...	4
5.	என் வீடு	...	6
6.	எங்கள் குடும்பம்	...	8
7.	என் பள்ளிக்கூடம்	...	10
8.	உன் ஊர் எது ?	...	12
9.	நாட்கள்	...	14
10.	உடல் உறுப்புகள்	...	16
11.	நாயும் காகங்களும்	...	18
12.	காகத்தின் ஊகம்	...	22
13.	எதிர்ச் சொற்கள்	...	24
14.	இவ்வளவு பெரியதா ?	...	27
15.	கடைகள்	...	30
16.	உழவு	...	33
17.	கோழி	...	37
18.	கூடை முடைதல்	...	41
19.	கார்த்திகை	...	44
20.	சூரியன்	...	48

21.	சூரியன் குஞ்சு	...	51
22.	விடுகதைகள்	...	56
23.	காட்டு விலங்குகள்	...	58
24.	வீரப்பன்	...	62
25.	பாட்டி வீட்டுப் பழம்பானை	...	65
26.	பழமொழிகள்	...	68
27.	உன்னைச் சுற்றிப்பார்	...	69
28.	காற்ருடி	...	72
29.	நாப்பழக்கம்	...	75
30.	பால் பிடிக்காத பூனை	...	76
31.	பசுவும் கன்றும்	...	80
32.	உலக நீதி	...	81
33.	ஆத்திசூடி	...	82

1. படப் பயிற்சி

படம் பார்த்துப் பெயர் எழுது:











2. படப் பயிற்சி

படத்தின் பெயரைச் சேர்த்துப் படி :



தழைகள் மேயும்.



ஏற உதவும்.

கொஞ்சிப் பேசும்.

3. எது சரி?

எடுத்துக் கூறு:



உடுக்கை

மத்தளம்

உரல்

வான்கோழி

மயில்

அன்னம்



மாம்பழங்கள்

தேங்காய்கள்

கொழுக்கட்டைகள்

காகம்

குயில்

மைனா

4. என்ன ?



இது என்ன ?

இது பசு

இவன் யார் ?

இவன் பாம்பாட்டி.

இவள் என்ன
செய்கிறுள் ?

இவள் நூல் நூற்கிறுள்.



கன்று என்ன செய்கிறது ?

கன்று பால் குடிக்கிறது.



ஆடுகள் என்ன
செய்கின்றன ?

ஆடுகள் புல் மேய்கின்றன.

குடியானவர்கள் என்ன
செய்கிறார்கள் ?

அவர்கள் கதிர்
அறுக்கிறார்கள்.

பயிற்சி

1. படி

வா	எடு	திற	உண்	தூங்கு
போ	கொடு	மூடு	தின்	எழு
இரு	விடு	வை	பார்	ஓடு
நட	சுடு	படி	பேசு	நில்

2. விடை சொல்

1. எது பால் குடிக்கிறது ?
2. ஆடுகள் என்ன செய்கின்றன ?
3. பாம்பாட்டி என்ன செய்கிறான் ?
4. குடியானவர்கள் என்ன செய்கிறார்கள் ?
5. நீ என்ன செய்கிறாய் ?

5. என் வீடு



இது என் வீடு.

என் வீடு பெரிய வீடு.

என் வீடு அழகாய் இருக்கும்.

என் வீடு சுத்தமானது.

என் அறை சிறியது.

அண்ணன் அறை பெரியது.

என் அறை வெளிச்சமானது.

பயிற்சி

1. படி

பெரிய	சுத்தமானது	அறை
அழகாய்	சிறியது	அண்ணன்
இருக்கும்	பெரியது	வெளிச்சமானது

2. எழுது

1. உன் வீட்டில் அறைகள் எத்தனை ?
2. உன் வீடு மாடி வீடா ?
3. உன் வீட்டில் கதவுகள் எத்தனை ?
4. தண்ணீர் எடுக்கக் கிணறு உண்டா ?

3. தெரிந்துகொள்

பெரிய × சிறிய
பெரியது × சிறியது
வெளிச்சம் × இருட்டு

} இவை எதிர்ச் சொற்கள்

6. எங்கள் குடும்பம்



இது எங்கள் குடும்பம்.

கையில் குழந்தை வைத்திருப்பவர் என் தாய்.

குழந்தை என் தங்கை.

அண்ணன் படிக்கிறான்.

அக்காள் நின்று கொண்டிருக்கிறாள்.

தம்பி பந்து விளையாடுகிறான்.

என் தந்தை செய்தித் தாள் படிக்கிறார்.

நாங்கள் பெற்றோர் சொற்படி நடப்போம்.

எங்கள் குடும்பம் பெரிய குடும்பம்.

பயிற்சி

1. படி

குடும்பம்	குழந்தை	அக்காள்	படிக்கிறார்
தந்தை	தங்கை	தம்பி	பெற்றோர்
தாய்	அண்ணன்	பந்து	பெரிய

2. கோடிட்ட இடங்களில் தக்க சொற்கள் எழுது :—

1. கையில்—வைத்திருப்பவர் என் —
2. எங்கள் குடும்பம் — —
3. என் தந்தையார் — தாள் —
4. நாங்கள் — சொற்படி —

3. தெரிந்துகொள்

தந்தை - தாய்	பாட்டன் - பாட்டி
அண்ணன்-அண்ணி	மைத்துனன் - மைத்துனி
மாமன் - மாமி	ஆசிரியன் - ஆசிரியை

7. என் பள்ளிக்கூடம்



இது என் பள்ளிக்கூடம்.

என் பள்ளியில் உள்ள வகுப்புகள் ஐந்து.

நான் இரண்டாம் வகுப்பில் படிக்கிறேன்.

அண்ணன் ஐந்தாம் வகுப்பில் படிக்கிறான்.

தம்பி முதல் வகுப்பில் படிக்கிறான்.

அக்காள் நான்காம் வகுப்பில் படிக்கிறாள்.

என் பள்ளி ஆசிரியர்கள் நல்லவர்கள்.

நாங்கள் அவர்கள் சொற்படி நடப்போம்.
நாங்கள் நன்ருகப் பாடம் படிப்போம்.

பயிற்சி

1. படி

பாடம்	பள்ளிக்கூடம்	இரண்டாம்	நான்காம்
பள்ளி	ஐந்தாம்	ஆசிரியர்கள்	நடப்போம்
வகுப்பு	முதல்	நல்லவர்கள்	சொற்படி

2. எழுது

பள்ளிக்கூடத்தைச் சுற்றியுள்ள இடங்களின் பெயர்களை எழுது.

3. தெரிந்துகொள்

படிக்கிறேன் × படிக்கமாட்டேன்

நடப்போம் × நடக்கமாட்டோம்

வருவான் × வரமாட்டான்

நிற்பான் × நிற்கமாட்டான்

நல்லவர்கள் × கெட்டவர்கள்

---

8. உன் ஊர் எது

உன் ஊரின் பெயர் என்ன ?

அதில் எத்தனை தெருக்கள் இருக்கின்றன ?

நீ எந்தத் தெருவில் இருக்கிறாய் ?

குளம் எங்கே இருக்கிறது ?

கோவில் எங்கே இருக்கிறது ?

உன் ஊரில் ஆறு உண்டா ?

நீ மலே பார்த்திருக்கிருயா ?

உன் மாமன் ஊர் எது ?

உன் அத்தையின் ஊர் எது ?

பயிற்சி

1. படி

திருவாரூர்	புதுக்கோட்டை	திருச்சிராப்பள்ளி
விசயபுரம்	வாணியம்பாடி	நாகபட்டினம்
மதுரை	திருப்பதி	தலேச்சேரி

2. எழுது

உன் ஊரைச் சுற்றியுள்ள வேறு ஊர்களின் பெயர்களே எழுது.

3. தெரிந்துகொள்

மலே - மலேயில்	ஊர் - ஊரில்
மாமன் - மாமனுடைய	குளம் - குளத்தில்
அத்தை - அத்தையை	தெரு - தெருவில்

9. நாட்கள்

இது என்ன ஆண்டு ?

இது———ஆண்டு.

இன்று கிழமை என்ன ?

இன்று———கிழமை.

இன்று தேதி என்ன?

இன்று———தேதி.

நீ பிறந்த நாள் யாது ?

நான் பிறந்த நாள்———

பயிற்சி

1. உரக்கப் படி

தமிழ் மாதங்கள்	ஆங்கில மாதங்கள்
1. சித்திரை	1. ஜனவரி
2. வைகாசி	2. பிப்ரவரி
3. ஆனி	3. மார்ச்
4. ஆடி	4. ஏப்ரல்
5. ஆவணி	5. மே
6. புரட்டாசி	6. ஜூன்
7. ஐப்பசி	7. ஜூலை

8.	கார்த்திகை	8.	ஆகஸ்டு
9.	மார்கழி	9.	செப்டம்பர்
10.	தை	10.	அக்டோபர்
11.	மாசி	11.	நவம்பர்
12.	பங்குனி	12.	டிசம்பர்

கிழமைகள்

1. ஞாயிறு	3. செவ்வாய்	5. வியாழன்
2. திங்கள்	4. புதன்	6. வெள்ளி
		7. சனி

கிழமைகள் ஏழு, வாரம் ஒன்று.
இருபத்து நான்கு மணி ஒரு நாள்.
நாட்கள் முப்பது, மாதம் ஒன்று.
மாதங்கள் பன்னிரெண்டு, ஆண்டு ஒன்று.

2. விடை சொல்

1. வருடப்பிறப்பு எப்பொழுது வரும்?
2. பொங்கல் எந்த மாதத்தில் வரும்?
3. டிசம்பர் மாதத்தில் வரும் விழா யாது?
4. உனக்குப் பெரிய விடுமுறை எப்பொழுது வரும்?
5. நீ பஞ்சாங்கம் வைத்திருக்கிருயா?

3. எழுது

இந்த மாதத்தில் விடுமுறை நாட்கள் யாவை?

10. உடல் உறுப்புக்கள்

தலையில் மயிர் வளர்கிறது.

தலைக்குள் மூளை இருக்கிறது.

முகத்தில் கண்கள், காதுகள் மூக்கு, வாய் ஆகிய உறுப்புக்கள் இருக்கின்றன.

கண்கள் பார்க்கின்றன. கண்களுக்கு இமைகள் உண்டு.

காதுகள் கேட்கின்றன.

மூக்கு மூச்சு விடுகிறது: மூச்சு வாங்குகிறது.

வாயினுள் நா,பற்கள் இருக்கின்றன.
நா சுவை பார்க்கிறது.
பற்கள் உணவைக் கடிக்கின்றன.
வாய் உண்கிறது; பேசுகிறது.
மார்புக்குள் இருதயம் இருக்கிறது.
வயிறு சோற்றைக் கொள்கிறது.
வயிற்றினுள் குடல்கள் இருக்கின்றன.

கைகள் வேலை செய்கின்றன.

கால்கள் நடக்கின்றன.

பயிற்சி

1. படி

தலை	காது	உறுப்பு	இருதயம்
மயிர்	மூக்கு	இமை	வயிறு
மூளை	வாய்	மூச்சு	குடல்
முகம்	நா	சுவை	கைகள்
கண்	பல்	மார்பு	கால்கள்

2. வாய்க்குள் படி

மயிரில்லாத தலை மொட்டை.

காணாக் கண் குருடு.

கேளாச் செவி செவிடு.

பேச முடியாதவன் ஊமை.

கால் இல்லாதவன் நொண்டி.

3. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை எழுது.

செவி, துதிக்கை, கால், அலகு.

கழுகுக்கு———கூர்மையானது.

பூனைக்குச்———நன்றாய்க் கேட்கும்.

பன்றியின்———குட்டையானது.

யானைக்குத்———உண்டு.

11. நாயும் காகங்களும்



என்னிடம் ஒரு நாய் இருக்கிறது.

அதன் பெயர் சிப்பாய்.

சிப்பாயிக்கு நாள் தோறும் நான் ஒரு தட்டில் சோறு போடுவேன்.

ஒரு நாள் சிப்பாய் சோறு தின்றபொழுது அங்கே ஒரு காகம் வந்தது.

காகம் சிப்பாயைப் பார்த்து, "அண்ணா, எனக்கு இரண்டு பருக்கைச் சோறு கொடு" என்று கேட்டது.

அதற்குச் சிப்பாய், “வௌ! வௌ!! போ! போ!!” என்று குரைத்து, அதைக் கடிக்கப் போயிற்று. காகம் பயந்து ஓடிற்று. அது அருகில் இருந்த மரத்தின் மீது ஏறி, ஒரு கிளையில் உட்கார்ந்து, “கா, கா, கா, கா, என்று நான்கு முறை கரைந்தது. உடனே ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, காகங்கள் வந்து விட்டன.

அவை ஐந்தும் நாயைச் சூழ்ந்து கொண்டன. ஒன்று அதன் முன்னே உட்கார்ந்தது; ஒன்று பின்னே உட்கார்ந்தது. மற்ற இரண்டும் பக்கங்களில் இருந்தன. ஒன்று பக்கத்தில் இருந்த கல்மீது உட்கார்ந்தது.

எல்லாக் காகங்களும் சேர்ந்து கரைந்தன. கா, கா, கா, கா, என்ற ஒலி எல்லாப் புறங்களிலும் எழுந்தது. ஒரு காகம் சிப்பாயின் தலையைக் கொத்த வந்தது. ஒரு காகம் அதன் வாலைப் பிடித்து இழுத்தது.

பாவம்! சிப்பாய் இங்கும் அங்கும் அலையத் தொடங்கிற்று. அது காகங்களை வெருட்ட

முயன்றது ; குதித்தது; "வௌ வௌ!" என்று குரைத்தது. ஒன்றும் பலிக்கவில்லை.

இப்படிச் சிப்பாய் குதித்துக் கொண்டிருந்த போது காகங்கள் முன்னும் பின்னுமாக வந்து, தட்டில் இருந்த சோற்றை யெல்லாம் தின்றுவிட்டன. அன்று சிப்பாய் பட்டினியாய்க் கிடந்தது.

பயிற்சி

1. படி

நாய்	நாள்தோறும்	கரைந்தது	குரைத்தது
காகம்	பருக்கை	சூழ்ந்து	இழுத்தது
சிப்பாய்	அப்பொழுது	கொத்த	முயன்றது
தட்டு	அருகில்	வெருட்ட	குதித்தது

2. விடை கூறு

1. முதல் காகம் சிப்பாயை என்ன கேட்டது?
2. வேறு நான்கு காகங்கள் எப்படி வந்தன?
3. அவை சிப்பாயை எப்படி அலைய வைத்தன ?
4. காகம் அறிவுள்ளதா ? இல்லையா ?

3. எழுது

காகம் கரையும். நாய் குரைக்கும்.

மாடு கதறும். பாம்பு சீறும்.

பன்றி உறுமும். குதிரை கனைக்கும்.

4. கோடிட்ட இடங்களை நிரப்பு

நாய் ஒரு——— (பறவை, மனிதன், விலங்கு)

காகம் ஒரு ——— (பறவை, மனிதன், விலங்கு)

நான் ஒரு ——— (பறவை, மனிதன், விலங்கு)

5. பின்வரும் சொற்களைத் தகுந்த இடத்தில் வை :

உறுமும், குரைக்கும், கதறும், கூவும், முழங்கும், கனைக்கும், ஊளையிடும், கொஞ்சும்.

சிங்கம் —

நாய் —

குயில் —

பன்றி —

நரி —

கிளி —

மாடு —

குதிரை —

12. காகத்தின் ஊகம்

(பாட்டை மனத்திற்குள் படி)

தண்ணீர் கிடையாமல்—காகம் ஒன்று
தவித்து அலைகையிலே
மண்ணால் செய்த ஒரு—சாடியினை
வழியில் கண்டதம்மா !
சாடியின் மீதிருந்து—தலையைச்
சரித்து நோக்கிடவே
சாடியிலே தூரில்—சற்றே
தண்ணீர் தெரிந்ததம்மா !
காகம் உடன் எழுந்து—சிறுசிறு
கற்கள் பொறுக்கிவந்து
ஊகமாய்ச் சாடியினுள்—அவற்றை
ஒவ்வொன்றாய் இட்டதம்மா !
இட்டிட வேநீரும்—மேலே
எழுந்து வந்ததம்மா !
சட்ட மாகக் குடித்துக்—காகம்
தளர்ச்சி தீர்ந்ததம்மா !
ஊக்கம் உடையவர்க்குத்—துன்பம்
உலகில் இல்லையம்மா !
ஆக்கம் பெருகும் அம்மா !—இதை நீ
அறிய வேண்டும்அம்மா !

—தேசிகவிநாயகம் பிள்ளை.

பயிற்சி

1. படி

தவித்து	ஊகமாய்	அலைகையில்
தளர்ச்சி	சாடியினை	ஆக்கம்
தூரில்	சரித்து	பெருகும்

2. விடை சொல்

1. காகம் ஏன் தவித்து அலைந்தது ?
2. சாடியில் தண்ணீர் எங்கே இருந்தது ?
3. காகம் என்ன செய்தது ?
4. கற்களைப் போட்டதும் என்ன நேர்ந்தது ?
5. இந்தப் பாடலினால் நீ அறிந்தது என்ன ?

3. எழுது

ஊகம்	ஊக்கம்
தலை	தளை
தளர்ச்சி	வளர்ச்சி

ஊக்கம் உடையவர் ஆக்கம் பெறுவர்.

4. கோடிட்ட இடங்களை நிரப்பு

(i) சாடி——செய்தது. (கண்ணாடியால், மண்ணால், கல்லால்)

(ii) துணி——செய்தது. (காகிதத்தால், மரத்தால், நூலால்)

13 எதிர்ச் சொற்கள்



யானை **பெரியது**. பூனை **சிறியது**.

பனை **உயரம்**. புதர் **குட்டை**.

பாம்பு **நீளமானது**. புழு **குறுகியது**.

தென்னை **நேராய்** வளரும். மூங்கில் **வளையும்**.

மரப்பட்டை **தடிப்பானது**.

பழத்தோல் **மென்மையானது**.

பாறை **சுரசுரப்பானது**.

பளிங்கு **வழவழப்பானது**.

வலக்கை உண்ண **உதவும்**.

இடக்கை உண்ண **உதவாது**.

கண்கள் முகத்தின் **முன்**புறம் இருக்கின்றன.

கூந்தல் தலையின் **பின்**புறம் இருக்கிறது.

வானம் **மேலே** இருக்கிறது.

நிலம் **கீழே** இருக்கிறது.

முற்றம் வீட்டின் **உள்ளே** இருக்கிறது.

திண்ணை வீட்டின் **வெளியே** இருக்கிறது.

வேலி தோட்டத்தைச் **சுற்றி** இருக்கிறது.

வாத்து குளத்தின் **குறுக்கே** நீந்துகிறது.

இடுப்பில் நாடாவை **இறுகக்** கட்டாதே.

கையில் வளைகளை **நழுவ** இடு.

மின்சார விளக்கு ஒளி **மிக்கது.**

எண்ணெய் விளக்கு ஒளி **குறைந்தது.**

பயிற்சி

1. படி

யானை	பாறை	முற்றம்	புதர்
பனை	பளிங்கு	வேலி	புழு
பாம்பு	தென்னை	நாடா	வலக்கை
பூனை	கூந்தல்	வளை	இடக்கை

2. கோடிட்ட இடங்களை நிரப்பு

வழவழப்பாய், வளைந்து, அடர்ந்து, தாவி.

(1) நாய்—ஓடும்.

(2) குரங்கு—குதிக்கும்.

(3) காட்டில் மரங்கள்—இருக்கும்.

(4) கண்ணாடி—இருக்கும்.

3. எதிர்ச் சொற்கள் கூறு

தண்ணீர், மேடு, சோம்பேறி, மிகுதி, அகலம்.

4. பொருத்திக் கூறு

வானம் - கீழே இருக்கிறது.

திண்ணை - மேலே இருக்கிறது.

நிலம் - வீட்டின் உள்ளே இருக்கிறது.

முற்றம் - வீட்டின் வெளியே இருக்கிறது.

14. இவ்வளவு பெரியதா?

(உரையாடல்)

குஞ்சுத்தவளை:—அம்மா, குளக்கரையில் ஓர் எருமை வந்தது. அது எவ்வளவு பெரியது தெரியுமா? அது தம்பியை மிதித்து முட மாக்கிவிட்டது அம்மா!

தாய்த் தவளை:—ஐயோ! எருமை எவ்வளவு பெரியது குழந்தாய்?

குஞ்சு:—மிகப் பெரியது அம்மா! ஒரு மலை மாதிரி இருந்தது, அம்மா.

தாய்:—என்னை விடவா?

குஞ்சு:—ஆமாம், அம்மா.

தாய்:—(உடலை உப்பிக் கொண்டு) இவ்வளவு பெரியதாய் இருந்ததா?

குஞ்சு:—இன்னும் பெரியது.

தாய்:—(இன்னும் உப்பிக் கொண்டு) இவ்வளவு இருக்குமா?

குஞ்சு:—இன்னும் மிகப் பெரியது.

தாய்:—(மேலும் உப்பிக் கொண்டு) இப்பொழுது?

குஞ்சு:—உன்னால் உப்ப முடியாது, அம்மா!

தாய்:—(இன்னும் உப்பிக் கொண்டு) உம்!.... இப்படிச் சொல்லிக் கொண்டே அது வயிறு வெடித்து மல்லாந்தது.

பயிற்சி

1 படி-எழுது

தண்ணீர்	தாவிற்று	பருத்தது	மல்லாந்தது
குளக்கரை	மிதித்தது	பாய்கிறது	பெரியது
வெடித்து	உப்பிற்று	இறந்தது	சிறியது

2. விடை கூறு

1. தவளைகள் எங்கே வாழும்?

2. தவளை முட்டை இடுமா? குட்டி போடுமா?

3. தவளை ஏன் குதித்துக் குதித்துப் பாய்கிறது தெரியுமா?

4. தவளைக் குஞ்சை மிதித்தது எது?

5. தவளை உப்பினுல் எருமை ஆகுமா?

3. கோடிட்ட இடங்களை நிரப்பு

(1) தவளை—பிராணி. (பெரிய, அகலமான, சிறிய)

(2) எருமையின் உடல்—(குறுகியது, பருத்தது, நெட்டையானது)

(3) குஞ்சு — ஆயிற்று. (பொட்டை, செவிடு, முடம்).

4. தெரிந்து கொள்

தவளை - தவளைகள் மலை - மலைகள்

எருமை - எருமைகள் குஞ்சு - குஞ்சுகள்

15. கடைகள்



முத்து சென்னைக்குப் புதியவன்.

அவன் தந்தை அப்பொழுது தான் சென்னைக்கு வேலை பார்க்க வந்தார்.

அவர் ஒரு நாள் கடைத் தெருவுக்குப் போனார். முத்துவும் பின்னே சென்றான்.

அரிசி, உப்பு, புளி, சர்க்கரை, எண்ணெய், நெய் முதலிய பொருள்களை அவர்கள் வாங்கினார்கள். பிறகு முத்துவுக்கு அவன் தந்தை சட்டைத் துணி, எழுதுகோல், புத்தகம் முதலியவற்றை வாங்கிக் கொடுத்தார்.

கடைக்காரர் சிலவற்றை முகந்து கொடுத்தார்; சிலவற்றை நிறுத்துக் கொடுத்தார்; துணிகளை நீட்டி அளந்து கொடுத்தார்; எழுது கோல்களை எண்ணிக் கொடுத்தார். மளிகைக் கடைக்காரர், அரிசி, உப்பு, பருப்பு ஆகியவற்றைப் படி, ஆழாக்கு இவற்றால் முகந்தார்.



புளி, சர்க்கரை, எண்ணெய், நெய் இவற்றைத் தராசில் வைத்து, வீசை, சேர், பலம் என்று அவர் நிறுத்துக் கொடுத்தார்.

துணிக் கடைக் காரர் துணிகளைக் கஜக் கோலால் அளந்து கொடுத்தார்.

புத்தகக் கடைக்காரர் புத்தகங்களை ஒன்று, இரண்டு, என்று எண்ணிக் கொடுத்தார்.

முத்துவுக்கு இவை யெல்லாம் வியப்பாய் இருந்தன. அன்று முத்துவுக்கு மகிழ்ச்சியாய் இருந்தது.

பயிற்சி

1. படி

அரிசி	எண்ணெய்	அளந்து
உப்பு	எண்ணி	ஆழாக்கு
புளி	புத்தகம்	படி
பருப்பு	முகந்து	தராசு
சர்க்கரை	நெய்	நிறுத்து

2. விடை சொல்

1. உன் ஊரில் என்ன என்ன கடைகள் உண்டு.

2. உன் ஊரில் விளையும் உணவுப் பொருள் கள் யாவை ?

3. உன் ஊரில் துணி நெய்கிறார்களா ?

3. எழுது

அளவை வகை: முகத்தல், நீட்டல், எண்ணல், அளத்தல், நிறுத்தல்.

பின் வருவனவற்றை எப்படி அளப்பது? வரிசைப் படுத்தி எழுது .—

காகிதம், கடுகு, கோதுமை, பந்து, நூல், மண்ணெண்ணெய், வெண்ணெய்.

16. உழவு

நாம் உண்ணும் உணவு யாது? நாம் அரிசிச் சோற்றையே உண்கிறோம். கோதுமை, கம்பு, கேழ்வரகு, தினை முதலியவைகளும் நமக்கு உண்பொருள்களே.

அரிசி நமக்கு எப்படிக் கிடைக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமே. நெல்லைக் குத்தினால் அரிசியாகும். நம் ஊரில் நெல் விளையும் வயல்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

இன்று நாம் வயற்புறம் போய் அங்கே என்ன என்ன நடக்கின்றன என்று பார்ப்போம்.

இதோ பாருங்கள். குடியானவர் இரண்டு எருதுகளை ஏரில் பூட்டி வயலை உழுகிறார். முதலில் அவர் வயலில் நீரைப் பாய்ச்சி வைத்திருப்பார். சேற்றில்

உழும்போது மண் நன்றாகப் புரண்டுவிடும். அப்படிச் செய்தால்தான் நெற்பயிர் நன்றாய் வேர் விட்டு வளரும்.

பிறகு அவர் பரம்பு அடிப்பார். அப்படிச் செய்வதால் சேறு, மேடு பள்ளமில்லாமல் மழ

மழவென்று ஒரே தளமாக ஆகும். இப்படித் தயாரித்த வயலுக்கு நாற்றங்கால் என்பது பெயர். அதில் நன்றாகப் பொறுக்கி எடுத்த நெல் விதைகளை அவர்

விதைப்பார். விதைத்துச் சில நாட்கள் சென்ற வுடன் நாற்று முளைக்கும்.

நாற்றங்கால்கள் பார்வைக்கு அழகாய் இருக்கும். நாற்றுக்கள் வளர்ந்து சில நாட்கள் ஆனவுடன் அவற்றைப் பிடுங்கி, வயல்களில் கொண்டு போய் நடுவார்கள். அவை அங்கே நன்ருகவளரும். சில மாதங்களில் அவற்றில் கதிர்கள் தோன்றும். அவை முற்றினவுடன் சுமை தாங்காமல் தலை சாய்ந்துவிடும்.

பயிர்கள் நன்ருக முற்றினவுடன் குடியான வர்கள் வயல்களுக்குப் போய் அவற்றை அரி வாளால் அறுத்துக் குவிப்பார்கள். பிறகு போர் அடித்து நெல்லைப் பிரித்து வீடுகளுக்குக் கொண்டு போவார்கள். வைக்கோல் மாடு களுக்கு உணவாகும்.

நீங்கள் பெரியவர்கள் ஆகும்போது சிறந்த குடியானவர்களாக விளங்க முயல வேண்டும்.

பயிற்சி

1. படி

வயல்	குடியானவர்	பயிர்	அரிவாள்
நாற்று	உழவு	பரம்பு	அறுப்பு
சம்பாநெல்	கார்நெல்	குறுவைநெல்	கதிர்
அரிசி	நொய்	உமி	தவிடு

2. விடை கூறு

1. உன் கிராமத்தில் என்ன என்ன விளை பொருள்கள் உண்டு ?
2. வயல்களில் என்ன விளைகின்றன ?
3. தோட்டங்களில் என்ன விளைகின்றன ?
4. வீட்டுக் கொல்லைகளில் என்ன விளைகின்றன ?

3. தெரிந்துகொள்

நன்செய்ப் பயிர்கள்: நெல், கரும்பு, வாழை, வெற்றிலை, கோதுமை.

புன்செய்ப் பயிர்கள்: கம்பு, கேழ்வரகு, சோளம் பருத்தி, துவரை.

4 கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமை. அரிசி, மாடுகள், நாற்று, அரிவாளால்.

(1) ——ஏர் இழுக்கும்.

(2) குடியானவர்—அறுப்பு அறுப்பார்கள்.

(3) நாற்றங்காலில்— முளைக்கும்.

(4) நெல்லிலிருந்து——கிடைக்கும்.

17. கோழி



நாள் தோறும் நம்மை விடியற்காலத்தில் கூவி எழுப்புவது எது? அதுதான் கோழி.

காகமும் கரைந்து நம்மை எழுப்பும். ஆனால் காகம் நம்மோடு கூடி வாழ்வதில்லை. அதை நாம் வளர்ப்பதும் இல்லை. கோழியோ நம் வீட்டிலே நம்மோடு வளர்ந்து வாழ்கிறது.

ஆண் கோழிக்குச் சேவல் என்பது பெயர்.

பெண் கோழியைப் பெட்டை என்பார்கள். சேவல் பார்ப்பதற்கு அழகாய் இருக்கும்; அதற்குத் தலையில் கொண்டை உண்டு.

பெட்டைக் கோழி முட்டை இடும். கோழி முட்டை வெள்ளை நிறமானது. அது மழமழ வென்று இருக்கும். கோழி தன் முட்டைமீது இருந்து அதனை அடை காக்கும். முட்டை பொரிந்து குஞ்சு வெளியே வரும்.

கோழி தரையைக் கிளறித் தன் அலகால் கொத்துவதைப் பார்த்திருக்கிறாயா ? அதற்குப் புழுக்களையும் பூச்சிகளையும் கொத்தித் தின்பதில் விருப்பம் அதிகம். தவிடு, நொய் இவற்றையும் கோழி தின்னும். தவிட்டைச் சிறிதளவு நீருடன் பிசைந்து அதற்கு வைப்பது நல்லது.

கோழி சில சமயங்களில் சிறிய பருக்கைக் கற்களைக் கொத்தித் தின்பதை நீ பார்த்திருக் கிறாயா ? ஏன் அது அப்படிச் செய்கிறது தெரி யுமா? நாம் உணவை நம் பற்களால் கடித்து மென்று உண்கிறோம். கோழிக்கு வாயில் பற்கள் இல்லை. அதற்குப் பதிலாக அதன் வயிற்றில் ஒரு கற்குடல் உண்டு. கோழியின் இரை அந்தக் குடலில் போய் அரைபடும். அதை நிரப்பு

வதற்குத்தான் கோழி சிறிய கற்களைப் பொறுக்கித் தின்கிறது.

கோழி எப்படிக் குளிக்கும் தெரியுமா? அது தன் கால் விரல்களால் மண்ணைக் கிளறிப் புழுதியைத் தன்மீது வாரி இறைத்துக் கொள்ளும். இப்படிச் செய்வதால் அதன்மீது உள்ள பூச்சி புழுக்கள் மாயும்; அழுக்கும் போகும். கோழியின் வால் புறத்தில் ஓர் உறுப்பு உண்டு. அதில் எண்ணெய் போன்ற ஒரு பொருள் உண்டு. கோழி தன் அலகால் அதை எடுத்துத் தன்மீது பூசிக்கொள்ளும். அதனுல் அதற்கு மினுமினுப்பு ஏற்படும்.

கோழி சாதுவான பறவை. அதனிடம் நாம் அன்பாய் இருக்க வேண்டும்.

பயிற்சி

1. படி-பொருள் சொல்

உண், விழுங்கு, குடி.
இரை, தீனி, உணவு.
கொத்து, பொறுக்கு, எடு.
எண்ணெய், வெண்ணெய்.

2. விடை சொல்

1. வீட்டில் வளர்க்கக்கூடிய பறவைகள் யாவை ?

2. கோழி எவற்றைத் தின்னும் ?

3. கற்குடலால் கோழிக்கு என்ன பயன் ?

4. அது தன்னை மினுமினுப்பாக்கிக் கொள்வது எப்படி ?

3. இவற்றின் நிறம்என்ன ?

சேவலின் கொண்டை, கோழி முட்டை, மயிலின் கழுத்து.

4. எதுநீளம்? எதுகுட்டை?

பாம்பு, புழு, மரம், செடி, ஆறு, குட்டை.

5. தெரிந்து கொள்

கோழி-கூவும்	குதிரை-கனைக்கும்
பசு-கதறும்	சிங்கம்-முழங்கும்
நாய்-குரைக்கும்	ஆடு-கத்தும்
கழுதை-கத்தும்	புலி-உறுமும்

---

18. கூடை முடைதல்

உன் ஊரில் என்ன என்ன கைத்தொழில்கள் நடக்கின்றன? நீ கவனித்திருக்கிறாயா? நமக்கு வேண்டிய பலவற்றையும் நாமே செய்து கொள்வது நல்லது.

இந்தப் படத்தில் இருப்பவரைப் பார். அவர் கூடை முடைகிறார். முறம், சல்லடை, குடலை, பாய், கூண்டு முதலிய பலவற்றையும் அவர் முடைவார்.

அவர் ஒருபோதும் சோம்பேறியாய் இருக்கமாட்டார். அவர் கொல்லைகளுக்குச்

சென்று நல்ல மூங்கில்களை வெட்டி வருவார். அவர் வீட்டுக் கூரையின்மேல் மூன்று மூங்கில் துண்டுகள் சாத்தி இருப்பதைப் பார்.

முதலில் அவர் மூங்கிலைப் பிளப்பார். அவற்றை அவர் மெல்லிய சிம்புகளாகச் சீவிக் கொள்வார். சிம்புகள் நார்போல் வளையும்; ஆனால் உறுதியாய் இருக்கும். சிம்புகளால் கூடை முடையலாம். ஓலை, பிரம்பு, கோரை ஆகியவையும் கூடை முடையப் பயன்படும்.

கூடைகளில் பலவகை உண்டு. அவற்றிற்குச் சாயம் பூசலாம். நாம் நம் வீட்டுப் பொருள்களைக் கூடைகளில் வைக்கலாம். அவை கனமாய் இரா. ஆகையால், அவற்றைத் தூக்குவது எளிது. எனவே, அவை எல்லா வீடுகளிலும் பயன்படுகின்றன.

பயிற்சி

1. படி

பாய் பின்னுதல், கூடை முடைதல், துணி நெய்தல், கைத்தொழில், பயிர்த்தொழில், குடிசைத் தொழில்.

2. விடை கூறு

1. உன் வீட்டிலுள்ள தட்டுமுட்டுச் சாமான்கள் யாவை ?

2. மூங்கிலால் என்ன என்ன பொருள்கள் செய்யலாம் ?

3. மூங்கில் எங்கே விளைகிறது ?

4. கூடை முடைய என்ன என்ன பொருள்கள் பயன்படுகின்றன ?

3. கீழ்வருபவைகளை அட்டவணையில் எழுது :

சட்டி, முறம், உரல், வெண்கலப்பானை, பாய், பிரப்பந்தட்டு, கூடை, செம்பு, நாற்காலி, அண்டா, மண்கூசா.

பித்தளை	வெண்கலம்	மரம்	மண்	பிரம்பு	மூங்கில்

19. கார்த்திகை விழா

தமிழ் நாட்டில் ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் மழைக் காலம் ஆகும். கார்த்திகை மாதத்தில் கதிரவனைப் பார்ப்பது கடினம். வானம் மேகங்கள் சூழ்ந்து இருக்கும். பகல் நேரத்திலும் ஒளி மங்கி இருக்கும். பகல் நேரமே இப்படி என்றால், இரவு பற்றிச் சொல்லவா வேண்டும்.

கரியைக் கரைத்து ஊற்றியது போல எங்கும் இருள் கவிந்து இருக்கும். கார்த்திகை மாத இரவுகளில் விளக்கு ஒளி வீசும்படி செய்வதே கார்த்திகை விழா ஆகும். இதனை விளக்கு வரிசை விழா என்பது பொருந்தும்.

இந்த மாதம் பிறந்தவுடன் விழாவும் பிறந்து விடும். இம்மாதம் ஒவ்வொரு வீட்டிலும் முன் வாயிலிலும் பின் வாயிலிலும் வரிசை வரிசையாக விளக்குகள் எரியும். இம்மாத முடிவு வரை இவ்வாறு தமிழர் அனைவரும் தங்கள் வீடுகளில் விளக்குகள் எரிய வைப்பது வழக்கம்.

இந்த வழக்கம் பழைய கால முதல் இருந்து வருகிறது. இதனால் இருட்டில் வெளியில் செல்பவர்களுக்கு நன்மை உண்டு.

கார்த்திகை மாதம் கிருத்திகை நாளில் இவ்வழக்கம் விழாவாகப் பெருமை அடைகிறது. இம்மாதக் கிருத்திகை நாள் தமிழர் வீடுகளில் இன்றைக்கும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. நம் பெரியவர்கள் முருகனை எண்ணி இவ்விழா கொண்டாடி வந்தனர். இன்றும் அதே வகையில் இவ்விழா நடந்து வருகிறது.

தமிழர் அன்று முழுவதும் எதனையும் உண்ண மாட்டார்கள். இரவு விளக்கு வைத்த பின் இறைவனைவணங்குவார்கள். விளக்கைப் பார்ப்பார்கள். பின் உண்பார்கள். சிலர் தினைமாவில் தேன் கலந்து நடுப்பகலில் சிறிது உண்பார்கள்.

சிறுவர்களும் சிறுமிகளும் வாணங்கள் கொளுத்தி மகிழ்வார்கள். வாணங்கள் கண்டு பிடிக்கப்படாத பழைய காலத்திலும் நம் சிறுவர்கள் மாவலி சுற்றுவார்கள். ஆண்பனையில் உள்ள ஆணங்காயை இடித்து இறுக அடைத்து அதில் தீயை வைத்துச் சுழற்றினால், தீ பொறி பொறியாகச் சுழன்று விழுவது காணத் தகுந்த காட்சியாகும்.

இவ் விழா கடவுள் பெயரால் நடந்தாலும் இருட்டுக் காலத்தில் மக்களுக்குப் பயன்படும் வகையிலும் அமைந்திருக்கிறது. நம் பெரியவர்கள் எதைச் செய்தாலும் அது பலவகையில் பயன்படுவதாய் இருக்கும்.

பயிற்சி

1. படி-எழுது

தமிழ்நாடு	கடினம்	கிருத்திகை
ஐப்பசி	மேகங்கள்	விழா
கார்த்திகை	ஒளிமங்கி	பெருமை
மழைக்காலம்	கவிந்து	பெரியவர்கள்
கதிரவன்	வழக்கம்	முருகன்

2. விடை கூறு

1. தமிழ் நாட்டில் மழைக் காலம் எது ?

2. கார்த்திகை மாதத்தில் கால நிலை எப்படி யிருக்கும் ?

3. கார்த்திகை மாத இரவு எப்படி இருக்கும் ?

4. கார்த்திகை விழா என்பது யாது ?

5. நம் பெரியவர்கள் இம்மாதத்தில் இவ் விழா ஏற்படுத்தியதன் கருத்து என்ன ?

3. தெரிந்துகொள்

பழைய × புதிய	இவை எதிர்ச் சொற்கள்
காலை × மாலை	
பகல் × இரவு	
ஒளி × இருள்	
பல × சில	
நன்மை × தீமை	

---

20. சூரியன்



வானத்தைப் பார். வானத்தில் சூரியன் எங்கே இருக்கிறது பார்.

சூரியனை நன்ருகப் பார்க்க முடிகிறதா? இல்லை. ஏன்! அதனைப் பார்த்தால் கண் கூசுகிறது. அது அவ்வளவு பளபளப்பாய் இருக்கிறது. அது காலையில் கிழக்கே கிளம்பி மாலையில் மேற்கே மறைகிறது. சூரியன் மறைந்த பின் இரவு வருகிறது.

இரவு இருள் மூடி இருக்கும். அப்போது நாம் உறங்குவோம். விடிந்ததும் நாம் விழித்து

எழுந்து நம் வேலைகளைச் செய்யத் தொடங்குகிறோம். படத்தில் யார் யார் என்ன என்ன செய்கிறார்கள் பார்.

உயிர்களின் வளர்ச்சிக்கு வெப்பமும் ஒளியும் வேண்டும். அவற்றைச் சூரியன் உலகுக்கு அளிக்கிறது. சூரிய வெப்பத்தால் நீர் ஆவியாக மாறி மேகம் ஆகிறது. மேகத்தால் நாம் மழை பெறுகிறோம். சூரியன் நமக்குச் செய்யும் உதவியைப் பார்த்தீர்களா ?

சூரியன் என்றாவது சோம்பி இருந்தது உண்டா ? நாமும் சூரியனைப் போல் சோம்பல் இல்லாமல் உழைக்க வேண்டும்.

பயிற்சி

1. படி

1. சூரியனுக்கு உள்ள வேறு பெயர்கள் :— ஞாயிறு, கதிரவன், பகலவன்.

2. ஒரு நாளின் இரண்டு பகுதிகள் :—பகல், இரவு.

3. ஒரு பகலின் மூன்று பகுதிகள் :—காலை, நடுப்பகல், மாலை.

2. விடை கூறு

1. உன் ஊருக்குக் கிழக்கே இருப்பது என்ன? அப்படியே மற்ற மூன்று திசைகளிலும் உள்ளவற்றைச் சொல்.

2. சூரியன் நமக்கு என்ன என்ன கொடுக்கிறது?

3. மேகம் எப்படி உண்டாகிறது?

4. மேகம் நமக்கு என்ன கொடுக்கிறது?

3. படம் பார்த்து எழுது

1. (1) உழவன், (2) பெண், (3) பையன்கள், (4) குதிரை, (5) மாடுகள்—செய்வன யாவை என்று சொல்.

2. ஆற்றைக் கடக்க என்ன இருக்கிறது?

3. படத்தில் நீ பார்க்கும் மரங்கள் யாவை?

4. படத்தில் உள்ள சூரியன் மறையும் நிலையா? தோன்றும் நிலையா?

21. சூரியன் குஞ்சு

JB
O3(20)
N58



நெடுங் காலத்துக்கு முன்னே ஓர் ஊரில் மூடன் ஒருவன் இருந்தான். அவனை ஊரார் மட்டி என்று அழைத்தார்கள். அதுவே அவன் பெயரும் ஆயிற்று.

மட்டி வாழ்ந்த ஊர் ஒரு பட்டிக்காடு. அந்த ஊர் மக்கள் விளக்கையே பார்த்தது இல்லை. அவர்கள் சூரியன் மறைவதற்கு முன்னே உண்டு உறங்கிவிடுவார்கள்.

மட்டியின் அத்தை ஒரு பட்டினத்தில் வாழ்ந்து வந்தாள். ஒருமுறை மட்டி தன் அத்தை வீட்டுக்குப் போனான்.

சென்னை-600 008.
136338

இரவு வந்ததும் ஊரார் தங்கள் வீடுகளில் விளக்கு ஏற்றி வைத்தார்கள். மட்டியின் அத்தையும் ஒரு விளக்கு ஏற்றினுள். அதைப் பார்த்து மட்டி, 'இது என்ன?' என்று அனைவரையும் கேட்டான். அவன் அறியாமையைக் கண்டு அவர்கள் அவனைப் பார்த்து நகைத்தார்கள். அவனுடைய அத்தை, 'இது சூரியன் குஞ்சு' என்று பதில் சொன்னுள்.

மறுநாள் காலையில் மட்டி தன் ஊருக்குப் போவதாக இருந்தான். எப்படியாவது சூரியன் குஞ்சையும் எடுத்துப் போய்விட வேண்டும் என்று அவன் விரும்பினுன். அதை எப்படி யாவது ஒளித்து வைத்துவிட அவன் எண்ணினுன். ஆகவே வீட்டில் உள்ளவர்கள் உறங்கும் வரை அவன் விழித்து இருந்தான். அவர்கள் தூங்கிய பிறகு அவன் மெல்லச் சென்று விளக்கை எடுத்துக் கொண்டான். அவன் சந்தடி செய்யாமல் நடந்து வீட்டின் முன்புறத்துக்குச் சென்ருன். அங்கே வைக்கோல் போர் ஒன்று இருந்தது. அதன் ஓரத்தில் மரக்கட்டைகள் பல

அடுக்கிக் கிடந்தன. அவற்றின் இடையில் ஓர் இடுக்கு இருந்தது. மட்டி அதனுள் சூரியன் குஞ்சை மறைத்து வைத்து விட்டுத் திரும்பி ஞன். அவன் மெல்ல வீட்டினுள் நுழைந்து படுத்துத் தூங்கினுன்.

விளக்கின் நெருப்பு அருகில் உள்ள குப்பைகளில் பிடித்துக்கொண்டது. அது சிறிது சிறிதாகப் பரவி, வைக்கோல் போரை எரித்து விட்டது. நெருப்பு வீட்டையும் பிடித்துக் கொண்டது. வீட்டில் உள்ளவர் எல்லாரும் அங் கும் இங்கும் ஓடினர். வீட்டில் உள்ள பொருள் கள் எல்லாம் எரிந்து போயின. ஊரார் ஓடிவந்து அரும்பாடு பட்டு நெருப்பை அணைத்தனர். அவ் வூரில் அன்று இரவு ஒருவரும் உறங்கவில்லை.

விடிந்தபின் வீட்டில் உள்ளவர் தங்கள் பொருள்களுள் ஏதேனும் சேதம் ஆகாமல் இருக் குமோ என்று தேடிப் பார்த்தனர். மட்டியும் ஏதோ ஒன்றைத் தேடிக்கொண்டே இருந் தான்.

அவன் அத்தை, சுப்பா "என்னடா, தேடுகிருய் ?" என்று கேட்டாள். அதற்கு அவன், "நான் சூரியன் குஞ்சை ஒளித்து வைத் தேன்; காணவில்லையே !" என்றுன்.

அதைக் கேட்டவர்கள் என்ன செய்திருப் பார்கள்? நீங்களே சொல்லுங்கள்.

பயிற்சி

1. விடை கூறு

இந்தக் கதையை மனத்திற்குள் படி. பின் வரும் கேள்விகளுக்கு விடை கூறு.

1. அத்தை வீட்டில் மட்டி கண்ட விந்தை யாது ?

2. விளக்கைச் 'சூரியன் குஞ்சு' என்றது ஏன் ?

3. மட்டி சூரியன் குஞ்சை எங்கே ஒளித்து வைத்தான் ?

4. அதனுல் என்ன உண்டாயிற்று ?

5. மட்டி எதைத் தேடினுன் ?

2. படி - எழுது

மூடன், பட்டிக்காடு, வைக்கோல் போர், மட்டி, சந்தடி, இன்னதென்று, அங்கும் இங்கும், முன்புறம், ஓரம், இடுக்கு, சேதம், பின்புறம்.

3. கோடிட்ட இடங்களை நிரப்பு

இடையில், முன்னே, மெல்ல.

1. ஊரார் சூரியன் மறைவதற்கு—உண்டு உறங்கினர்கள்.

2. எல்லாரும் தூங்கிய பிறகு அவன்—எழுந்தான்.

3. மரக் கட்டைகளின்—ஓர் இடுக்கு இருந்தது.

4. தெரிந்துகொள்

பட்டினம்	× பட்டிக்காடு	இவை எதிர்ச் சொற்கள்
நகைத்தார்	× அழுதார்	
விரும்பினன்	× வெறுத்தான்	
உறக்கம்	× விழிப்பு	
முன்புறம்	× பின்புறம்	

22. விடுகதைகள்

முத்துச் சிலம்புக்காரி ;
முப்பணத்து ஓலைக்காரி ;
தண்டைச் சதங்கைக்காரி ;
தாழ்வார வீட்டுக்காரி ;
அவளைத் தொடுவானேன் ?
கவலைப் படுவானேன் ?

அவள் யார் ?



பாதாளத்திலே பிறந்தவன் ;
பம்பரத்திலே சுழன்றவன் ;
இளம் வெயிலில் காய்ந்தவன் ;
நெருப்பு மூலை கண்டவன் ;
அவரவர் வீட்டுக்குப் போனவன் ;

யார் அவன் ?

ஏறினால் வழுக்கும் ;
இலை சுருளும் ;
காய் துவர்க்கும் ;
பழம் இனிக்கும்.

எது அது ?



நீரிலே விளையும் பூ;

நிலத்திலே ஓடாப் பூ;

மாதர் கொண்டைக்கு ஆகாப் பூ;

ஊரெல்லாம் உலவிவரும் பூ.

அது என்ன பூ ?

பயிற்சி

1. படி

தேள்	பானை	வாழை	உப்பு
கேள்	யானை	தாழை	மப்பு
வேள்	பூனை	மோழை	தப்பு

2. விடை சொல்

1. சிலம்பு எங்கே அணிவது ?
2. ஓலை எங்கே அணிவது ?
3. சதங்கை எங்கே அணிவது ?
4. எது துவர்க்கும்?
5. எது இனிக்கும் ?

3. கோடிட்ட இடங்களை நிரப்பு

இனிக்கும், புளிக்கும், உறைக்கும், துவர்க்கும், கசக்கும், கரிக்கும்.

1. தேன்——
2. எலுமிச்சை——
3. மிளகாய்——
4. வாழைக்காய்——
5. வேப்பங்காய்——
6. உப்பு——

23. காட்டு விலங்குகள்

நாம் இன்று விலங்குக் காட்சி நிலையம் போவோம் வா. இங்கே ஊர்வன, பறப்பன, நடப்பன ஆகியவை இருக்கின்றன. விலங்குகள் எல்லாம் நடப்பனவே. அவற்றுள் சில விலங்குகள் காடுகளிலே வாழும். அவை மிகக் கொடியவை. அவற்றுள் சிலவற்றை மக்கள் பிடித்துக் கூண்டுகளில் வைத்துக் காட்டுகிருர்கள்.

இதோ பார், ஒன்றன் பக்கத்தில் ஒன்ருக மூன்று கூண்டுகளுள் கொடிய காட்டு விலங்குகள் இருக்கின்றன. அக்கூண்டுகளுக்கு வலிய இரும்புக் கம்பிகள் இட்டிருக்கிருர்கள்.

பார். இல்லாவிட்டால் அவ்விலங்குகள் வெளியே வந்துவிடும்.

முதற்கூண்டில் இருப்பவை சிங்கங்கள். அவற்றுள் ஒன்று ஆண், மற்றது பெண்: ஆண் சிங்கத்துக்குப் பிடரி மயிர் உண்டு. சிங்கத்தை விலங்குகளின் மன்னன் என்பார்கள். அது மிகுந்த வலிமை உடையது. சிங்கம் யானையைக்கூடக் கொன்றுவிடும்.

அடுத்த கூண்டில் இருப்பது புலி. அதன் உடல் எவ்வளவு நீளமாய் இருக்கிறது பார். அதன் மேல் தோல் மிகவும் பளபளப் பாகவும் வழவழப்பாகவும் இருக்கும். அதன் மேலே அழகான கோடுகள் இருக்கும். புலி யில் பல வகைகள் உண்டு. புலி பூனை இனத் தைச் சேர்ந்தது; அதற்கு இரவில் கண் நன்ருய்த் தெரியும். "பார்த்தால் பசு; பாய்ந்தால் புலி" என்கிருர்களே! அதன் பொருள் உனக்குத் தெரியுமா? பாய்ச்சலில் புலிக்கு ஒப்பான விலங்கு வேறு இல்லை. புலி மிகக் கொடுமை யானது.

அடுத்த கூண்டைப் பார். அதில் ஒரு தாய்க் கரடி தன் இரண்டு குட்டிகளுடன் நிற்கிறது. கரடியும் மிக்க கொடூரமான விலங்கு. அதற்கு உடல் முழுமையும் கரிய மயிர் மூடியிருக்கும்.

இன்னும் இங்கே வகை வகையான விலங்குகள் உண்டு. ஒட்டகம், ஒட்டைச் சிவிங்கி, கோவேறு கழுதை, காண்டாமிருகம், நீர்யானை, மான் முதலியவை பல இங்கே உண்டு.

பயிற்சி

1. பிரித்துக் காட்டு

1. எருமை, முள்ளம்பன்றி, ஆடு, நீர்யானை, பூனை, புலி, கழுதை, சிங்கம், பசு, சிறுத்தைப்புலி.

வீட்டு விலங்கு	காட்டு விலங்கு

2. மீன், புழு, பாம்பு, யானை, கருடன், பல்லி, முதலை, தவளை, காகம், நாய், எறும்பு, புலி, புரு, நாகப்பூச்சி, மைனு, சிங்கம், எலி, வௌவால்.

நீர் வாழ்வன	பறப்பன	நடப்பன

2. விடை கூறு

1. பிடரி மயிருடைய விலங்குகள் இரண்டின் பெயர்களைச் சொல்.

2. இரவில் கண் தெரியும் விலங்குகள் இரண்டின் பெயர்களைச் சொல்.

3. நீரிலும் தரையிலும் வாழ்பவை இரண்டின் பெயர்களைச் சொல்.

24. வீரப்பன்



இந்தப் படத்தில் பையன் என்ன செய்கிறான் பார். காளை எவ்வளவு முரட்டுத் தனமாய்ப் பாய்கிறது? அதைப் பையன் மிகுந்த வீரத்துடன் அடக்குகிறான் பார். அவன் பெயர் வீரப்பன். அவன் அருகில் நிற்பவர் முருகப் பிள்ளை என்பவர்.

முருகப்பிள்ளை அந்த ஊரில் பெரிய பணக்காரர். அவரிடம் பல காளைகள் இருந்தன. ஒரு நாள் ஒரு காளை கட்டுக்கு அடங்காமல் வீட்டை விட்டு ஓடிவிட்டது. முருகப் பிள்ளையும் ஆட்களும் எவ்வளவோ முயன்றார்கள். ஆனால் அதைப் பிடிக்க அவர்களால் முடியவில்லை.

காளை ஊருக்கு வெளியே நெடுந் தொலை ஓடி விட்டது.

அங்கே வீரப்பன் ஆடுகள் மேய்த்துக் கொண்டு இருந்தான். அவன் துள்ளி ஓடி வருகிற காளையைக் கண்டான். அவன் சரேரென்று ஓடி வந்து அந்தக் காளையின் கயிற்றை ஒரு கையிலும், மூக்காங்கயிற்றை மற்ருெரு கையிலும் பிடித்து அதை நிறுத்திவிட்டான். அது ஆனமட்டும் துள்ளிப் பாய்ந்தது. ஆனுல் அவனிடமிருந்து தப்பி ஓட அதனுல் முடியவில்லை. அதற்குள் முருகப் பிள்ளையும் அங்கே வந்து சேர்ந்தார். அவர் அக்காளையை வீரப்பனிடமிருந்து பெற்று வீடு சென்ருர்.

அன்று அவருக்கு இருந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அன்று மாலை அவர் ஊரார் எல்லாரையும் அழைத்து வீரப்பனின் வீரத்தை அவர்கள் முன் மெச்சினுர். அவனுக்கு நல்ல ப்ரிசு அளித்தார். அன்று முதல் ஊரார் அவனை வீர வீரப்பன் என அழைத்தனர்.

பயிற்சி

1. படி

வீரம்	அச்சம்	மெச்சு
முரட்டுத்தனம்	காளை	புகழ்
துணிச்சல்	நடுக்கம்	பரிசு

2. விடை கூறு

1. முருகப் பிள்ளை எவற்றை வளர்த்து வந்தார்?

2. காளையின் அருகே போக ஏன் ஆட்கள் பயந்தனர்?

3. வீரப்பன் காளையை எப்படி அடக்கினான்?

4. அவன் காளையை நன்றாகப் பிடித்திரா விட்டால், அது அவனை என்ன செய்திருக்கும்?

5. வீரப்பன் தன் உயிருக்கு அஞ்சினானா?

6. ஊரார் வீரப்பனுக்கு என்ன பெயர் இட்டார்கள்?

7. உன் ஊரில் வீரர்கள் எவரேனும் உண்டோ?

8. உனக்கு வீரக் கதை ஏதேனும் தெரியுமா?

3. பிரித்துக் காட்டு

சேவல், கடாரி, காளை, வீரன், பெட்டை, கடா, அரசி.

ஆண்	பெண்

25. பாட்டி வீட்டுப் பழம்பானை

(மனத்திற்குள் படி)

பாட்டியின் வீட்டுப்
பழம்பானை — அந்தப்
பானையும் ஒருபுறம்
ஓட்டை யடா !

ஓட்டை வழிஒரு
சுண்டெலியும் — அதன்
உள்ளே புகுந்துநெல்
தின்ற தடா !

உள்ளே புகுந்துநெல்
தின்று தின்று — வயிறு
ஊதிப் புடைத்துப்
பருத்த தடா !

மெள்ள வெளியில்
வருவதற்கும் — ஓட்டை
மெத்தச் சிறிதாகிப்
போச்சு தடா !

பானையைக் காலை
திறந்தவுடன் — அந்தப்
பாட்டியின் பக்கமாய்
வந்த வொரு

பூனை எலியினைக்
கண்டதடா ! — ஓடிப்
போயதைக் கௌவியே
சென்ற தடா !

கள்ள வழியினிற்
செல்பவரை — எமன்
காலடி பற்றித்
தொடர்வா னடா !

உள்ள படியே
நடப்பவர்க்குத் — தெய்வம்
உற்ற துணையாக
நிற்கு மடா!

—தேசிக விநாயகம் பிள்ளை

பயிற்சி

1. விடை கூறு

1. பானைக்குள் பாட்டி என்ன வைத்திருந்தாள் ?

2. எலி அதற்குள் எப்படி நுழைந்தது ?

3. உள்ளே எலி என்ன செய்தது ?

4. ஏன் அதனால் வெளியே வர முடியவில்லை ?

5. காலையில் பாட்டி என்ன செய்தாள் ?

6. எலி எப்படி வெளியே வந்தது ?

7. பாட்டியுடன் வந்தது எது ?

8. அது என்ன செய்தது ?

2. எழுது

எமன் கள்ளர்களைத் தொடர்வான்.

தெய்வம் நல்லவர்களைக் காக்கும்.

3. தெரிந்துகொள்

பானை - பானைகள்
எலி - எலிகள்
ஓட்டை - ஓட்டைகள்

பூனை - பூனைகள்
தெய்வம் - தெய்வங்கள்
கள்ளன் - கள்ளர்கள்

26. பழமொழிகள்

அழுத பிள்ளை பால் குடிக்கும்.

ஆடை இல்லாதவன் அரை மனிதன்.

இருந்த கால் மூதேவி, நடந்த கால் ,சீதேவி.

உண்டதுதானே ஏப்பம் வரும்.

ஊர்வாயை மூட உலைமூடி இல்லை.

எட்டுச் சுரக்காய் கறிக்கு ஆகுமா ?

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ?

ஒரு பானைச் சோற்றுக்கு ஒருசோறு பதம்.

ஓணன் வேலிக்கு இழுக்கிறது; தவளை
தண்ணீருக்கு இழுக்கிறது.

பயிற்சி

(1) இவற்றை உரக்கப் படி. பல முறை படி.

(2) நீ கேட்ட வேறு பழமொழிகளைச் சொல்.

27. உன்னைச் சுற்றிப் பார்

உன்னைச் சுற்றிப் பார். சூரியனும் சந்திரனும் நமக்கு வெளிச்சம் கொடுக்கின்றன. காற்று வீசி நம்மைக் குளிரச் செய்கிறது. மழை தண்ணீரைப் பொழிந்து ஆற்றையும் குளத்தையும் வயல்களையும் நிரப்புகிறது. புல் பூண்டுகளும் செடிகளும் கொடிகளும் நமக்கு வேண்டிய உணவைக் கொடுக்கின்றன. மாடுகளும் ஆடுகளும் நமக்குப் பாலைத் தருகின்றன. காளை, குதிரை முதலியன நமக்காக உழைக்

கின்றன. மலர்கள் நமக்கு அழகையும் மணத்தையும் அளிக்கின்றன.

இப்படி உலகத்தில் உள்ள பொருள்கள் எல்லாம் நமக்கு நன்மையைச் செய்கின்றன. நாம் அவற்றிற்குத் திரும்ப நன்மை செய்ய வேண்டாமா? எப்படி நன்மை செய்வது? அவற்றினிடம் அன்பு காட்ட வேண்டும். அதுவே நாம் அவற்றிற்குச் செய்யும் நன்மை. நாம் எதற்கும் தீமை புரிதல் ஆகாது. நாம் எல்லாரிடமும் அன்பு காட்ட வேண்டும். அப்படிச் செய்தால் உலகில் தீமையே நடவாது.

பயிற்சி

1. படி

சூரியன்	குளம்	கொடு	ஆறு
சந்திரன்	வயல்	தா	செடி
காற்று	புல்	அளி	தீமை
மழை	பூண்டு	நன்மை	நடவாது

2. விடை கூறு

1. சூரியன் நமக்குச் செய்யும் நன்மை யாது ?

2. மழை நமக்குச் செய்யும் நன்மை யாது ?

3. நிலம் நமக்கு என்ன தருகிறது ?.

4. ஆடு மாடுகள் நமக்குச் செய்யும் உதவி என்ன ?

3. எழுது

மழை சோவென்று பொழிகிறது.

வெயில் சுரீரென்று காய்கிறது.

தண்ணீர் சில்லென்று இருக்கிறது.

4. பொருத்திக் கூறு

காற்று — குளத்தை நிரப்புகிறது.

ஆடு — குளிரச் செய்கிறது.

மழை — பால் தருகின்றது.

குதிரை— மணத்தைத் தருகின்றது.

மலர் — நமக்கு உழைக்கிறது.

28. காற்ருடி

ஒரு நாள் மாலே நேரம். கந்தன் தன் ஊர்ப்புற மந்தைவெளியில் காற்ருடி விட்டுக் கொண்டு இருந்தான் காற்ருடி வானத்தில் உயரத்தில் ஆடிக் கொண்டு நின்றது. ஊர்ப் பிள்ளேகளில் பலர் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தனர்.

சரேரென்று காற்று வேகமாக வீசத் தொடங்கிற்று. மரங்கள் எல்லாம் அசைந் தன. காற்ருடிக்குத் தானும் காற்ருேடு பறக்க

வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. அது காற்றைப் பார்த்து, " அண்ணு என்னையும் உன்னுடன் அழைத்துப் போ. எனக்கும் உன்னைப் போல் அலைய ஆசையாய் இருக்கிறது. இந்தக் கயிற்றில் கட்டுப்பட்டு நிற்க நான் விரும்பவில்லை " என்றது.

அதற்குக் காற்று, " தம்பி, நீ இப்பொழுது கவலை இல்லாமல் வானத்தில் மிதந்து கொண்டு இருக்கிருய். என்னைப் பார். மரங்கள் மீதும் மலைகள் மீதும் மோதிக் கொண்டு அலைகிறேன். நீ இருக்கும் இடத்திலேயே இரு. அதுவே இன்பமானது " என்றது.

காற்ருடி, " அண்ணு நான் விலங்கு இடப்பட்டவன் போல் இருக்கிறேன். என் மனம் போனபடி அலைய என்னுல் முடியவில்லை. என்னை உன்னேடு தயவு செய்து அழைத்துப்போ. நான் உன்னைக் கும்பிடுகிறேன் " என்று சொல்லி வணங்கிற்று.

அதற்குக் காற்று இணங்கி மிக வேகமாக அடித்தது. கயிறு அறுந்தது. காற்ருடி காற்ரேடு சென்றது. அப்பொழுது காற்ருடிக்கு இருந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

ஆனல், அது செல்லும் வழியில் ஒரு மரம் இருந்தது. அதனில் அறுந்த கயிறு சிக்கிக் கொண்டது. அதன் மேல் காற்ருடியால் பறக்க முடியவில்லை. அங்கேயே அது தொங்கிற்று. காற்று மேலும் மேலும் வீச அதன் உடலெல்லாம் கிழிந்து போய்விட்டது. அப்பொழுது அது பட்ட வருத்தத்தைச் சொல்லவும் வேண்டுமோ ?.

பயிற்சி

1. படி

மாலைநேரம்	மேலும் மேலும்	மிதந்து
வேடிக்கை	ஆசை	மோதி
அழை	வானம்	இணங்கி
அலை	மலை	குலை
சரேரென்று	வருத்தம்	குழை

2. விடை கூறு

1. காற்றாடி காற்றைப் பார்த்து என்ன கேட்டது ?

2. காற்று சொன்ன பதில் என்ன ?

3. காற்றாடி மேலும் எப்படிக் கெஞ்சிற்று ?

4. காற்றாடி என்ன ஆயிற்று ?

3. இரண்டு பொருள்கள் கூறு

அலை, மலை, விலங்கு.

---

29. நாப் பழக்கம்

கீழே உள்ளவற்றைப் பலமுறை உரக்க விரைவாகப் படி :

1. கீழே ஏழு ஓலை; மேலே ஏழு ஓலை.

2. ஒன்பது நரியிலே ஒரு நரி கிழ நரி.

3. கிழ நரி பிடரியில் ஒரு பிடி நரைமயி

4. பிட்டுச் சுட்டுப் பெட்டியிலே போடு

30. பால் பிடிக்காத பூனை

(ஒரு நாடகம்)

காட்சி 1

[தெனாலிராமனும் அவன் மனைவியும் பேசிக்கொள்கின்றனர்.]

தெனாலிராமன் : ஊரில் எலிகள் பெருத்துப் போயினவாம். அதற்காக ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு பூனை வளர்க்க வேண்டுமாம். இது அரசர் கட்டளை.

மனைவி: அதற்கு உணவுக்கு என்ன செய்வது!

தெனாலி : அதற்காக அரண்மனையிலிருந்து நாள்தோறும் ஒவ்வொரு படி பால் அனுப்புவார்களாம்.

மனைவி : நமக்குக் குடிக்கப் பால் இல்லை ; பூனைக்குப் பாலா ?

தெனாலி : ஏன் ? நாமே பாலையெல்லாம் குடித்து விடுவோமே !

மனைவி : பூனை இளைத்துவிடுமே! அரசர் வந்து கேட்டால் என்ன சொல்வது ?

தெனாலி: அதற்கு நான் ஒரு வழி செய்கிறேன். நாளைக்குப் பூனையும் பாலும் வரட்டும்.

காட்சி 2

தெனுலி : இதோ பாலைக் கொதிக்கக் கொதிக் கக் காய்ச்சி வா. இந்தப் பூனை பாலைக் கண்டதும் எப்படிப் பறக்கிறது. பார். கொண்டு வா சீக்கிரம்.

மனைவி : இதோ கொண்டு வந்து விட்டேன். பொங்கப் பொங்கக் காய்ச்சி யிருக்கிறேன்.

[பாலை ஒரு கிண்ணத்தில் கொண்டு வந்து வைக்கிருள். பூனை அதைக் குடிக் கப் போய் வாய் சூடு தாளாமல் கத்திக் கொண்டே ஓடுகிறது.]

தெனுலி : ஐயோ! பூனை எப்படி ஓடுகிறது பார்.

மனைவி : அதன் முகமெல்லாம் வெந்து விட் டது ஐயோ பாவம்!

தெனுலி : அதனுல் என்ன? இனி அது ஒரு நாளும் பாலின் அருகில்கூட வராது. பால் இனி நமக்கே.

காட்சி 3

[அரசர் கோபத்துடன் பேசுகிருர். தெனுலிராமன் ஒதுங்கி நிற்கிருன். பூனை மெலிந்து நிற்கிறது.]

அரசர் : ஏனடா உன் வீட்டுப் பூனை மட்டும் இவ்வளவு இளைத்திருக்கிறது? நான் கொடுக்கும் பாலை என்னடா செய்கிருய்?

தெனாலி: சுவாமி, பூனை பாலைத் தொடமாட்டேன் என்கிறதே! பாலைக் கண்டதும் ஓட்டம் பிடிக்கிறதே! நான் என்ன செய்வேன்!

அரசர்: பால் பிடிக்காத பூனையும் உண்டோ? நீ சொல்வதெல்லாம் பொய்.

தெனாலி: தாங்களே நேரில் பாருங்கள். பாலை இதோ கொண்டு வருகிறேன்! பூனை குடிக்கிறதா பாருங்கள்.

[உள்ளேபோய் ஒரு கிண்ணத்தில் பாலைக் கொண்டு வந்துவைக்கிருன். அதைக் கண்டதும் பூனை ஓடி விடுகிறது.]

அரசர் : ஆமாம், நீ சொல்வது உண்மைதான். இந்தப் பூனைக்குப் பால் பிடிக்கவில்லை. நீ என்ன செய்வாய்; இனி உன்மேல் கோபம் இல்லை. போ.

[அரசர் போகிறார். தெனாலிராமனும் மகிழ்ச்சியுடன் வீட்டுக்குள் போகிறான்.]

பயிற்சி

1. படி - எழுது

ஒவ்வொரு	சுவாமி	அரண்மனை
கொதிக்கக்கொதிக்க	ஐயோ	கிண்ணம்
பொங்கப்பொங்க	பாவம்	கோபம்

2. விடை கூறு

1. அரசர் வீடுதோறும் ஏன் பூனை வளர்க்கக் கட்டளை இட்டார்?

2. தெனாலிராமன் பாலைத் திருட என்ன செய்தான்?

3. அரசர் ஏன் ஏமாந்து போனார்?

4. "நான் என்ன செய்வேன்?"— இப்படிச் சொன்னவர் யார்?

5. "பால் பிடிக்காத பூனை உண்டோ?"— இப்படிக் கேட்டவர் யார்?

6. "நமக்குக் குடிக்கப் பால் இல்லை."— இப்படிச் சொன்னவர் யார்?

3. வேறுபாடு அறி

இளை	வலி	பாலை	நாளும்	கலை
இலை	வழி	பாளை	நாலும்	களை

31. பசுவும் கன்றும்



தோட்டத்தில் மேயுது
வெள்ளைப் பசு—அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக் குட்டி
அம்மா என்குது 1
வெள்ளைப் பசு—உடன்
அண்டையில் ஓடுது
கன்றுக் குட்டி 2
நாவால் நக்குது
வெள்ளைப் பசு—பாலை
நன்ருய்க் குடிக்குது
கன்றுக் குட்டி.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

பயிற்சி

2. விடை கூறு

1. பசு என்னென்ன செய்கிறது?

2. அவற்ருல் கன்றுக்குட்டி அடையும் பலன் என்ன?

உலக நீதி

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்.

ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்.

மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.

போகாத இடந்தனிலே போக வேண்டாம்.

அஞ்சாமல் தனி வழியே போக வேண்டாம்.

நெஞ்சாரப் பொய்தனைச் சொல்ல வேண்டாம்.

கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்.

செய்த நன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்.

மூத்தோர் சொல் வார்த்தைகளை மறக்க
வேண்டாம்.

தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்.

ஆத்திசூடி

அறம் செய விரும்பு.
ஆறுவது சினம்.
இளமையில் கல்.
ஈவது விலக்கேல்.
உத்தமனாய் இரு.
ஊக்கமது கைவிடேல்.
எண் எழுத்து இகழேல்.
ஏற்பது இகழ்ச்சி.
ஐயம் இட்டு உண்.
ஒப்புர வொழுகு.
ஓதுவது ஒழியேல்.
ஔவியம் பேசேல்.
செய்வன திருந்தச் செய்.
சோம்பித் திரியேல்.
தந்தை தாய்ப் பேண்.
நன்றி மறவேல்.
நூல் பல கல்.
நோய்க்கு இடங் கொடேல்.
பெரியோரைத் துணைக் கொள்.
மேன் மக்கள் சொற்கேள்.
வித்தை விரும்பு.
வைகறைத் துயில் எழு.

73 03/20 N58
136338
சென்னை-600 008

2.2/64/c 411

எமது சொந்த வெளியீடுகள்

கமல வாசகம் முதலாவது
ஷை இரண்டாவது
ஷை மூன்ருவது
ஷை நர்ன்காவது
ஷை ஐந்தாவது
கோலாலம்பூர் சரித்திரம்
இமயம்கண்ட இருபெருவேந்தர்
நித்திலக் கோவை
கமல பூகோளம் மூன்ருவது
கமல பூகோளம் நான்காவது
. . . . ஐந்தாவது

அருங்குறள் ஐம்பது (மூ—உ.)
விவேகானந்தா எண்சுவடி வாய்பாடு
சுகாதாரக் குறிப்புகள் முதல் பாகம்
இரண்டாம் பாகம்

விவேகானந்தா புத்தகசாலை
(ஸ்ரீ ராமகிருஷ்ண நிலையம்)
விஜயபுரம்,
திருவாரூர்.